ஈரோடு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்.

*வினா எண். 62—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, அக்கிரகாரம் பேரூராட்சி, சூரம்பட்டி ஊராட்சி, காசிப்பாளையம் பேரூராட்சி ஆகியவற்றில் குடிநீர் சப்ளை திட்டம் தயாரிக்கப்பட்டு இதுவரையில் பூரணமாக நிறைவேற்றப்படாமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கென்ன காரணம்?

(இ) அதை துரிதமாக நிறைவேற்ற அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) (ஆ) மற்றும் (இ): வீரப்பன்சத்திரம், பெரிய அக்கிரகாரம் பேரூராட்சிகளுக்கு 28—4—1980 முதல் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. காசிபாளையம் பேரூராட்சியிலும், சூரம்பட்டி ஊராட்சியிலும் குடிநீர்த் திட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 1981ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிவுற்று பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படும்.

திரு. கு. ரமணி: இந்தப் பேரூராட்சிகள் அத்தனையும் ஈரோடு நகரத்தைச் சுற்றிலும் இருக்கும்படியான ஓரளவு அபிவிருத்தி அடைந்துள்ள இடங்கள். இந்த இடங்களில் குடிதண்ணீர் திட்ட விஷயத்தில் இவ்வளவு காலதாமதம் ஏற்பட என்ன காரணம்?

[முற்பகல் 9-10]

இரண்டு இடங்களுக்கு, இரண்டு பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். நல்லது, அதை நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் இரண்டு இடங்களிலே ஆரம்பிப்பதற்கு இவ்வளவு காலம் ஆகிறதே, ஏன் இவ்வளவு தாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 ஜுலை 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இரண்டு முடிந்து விட்டது என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறார்கள். இத்திட்டத்தில் காசிபாளையம்-சூரம்பட்டி பேரூராட்சிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய, வீரப்பன்சத்திரம்— பெரிய அக்கிரகாரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பிரதான நீரேற்றுக் குழாயிலிருந்து தருந்த பிரிவு ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன, இதற்காக 27—3—1978-ம் நாளிட்ட அரசாங்க ஆணை எண். 459-ல் ரூ. 53.96 இலட்சம் அமைப்புச் செலவிற்கும், ரூ. 1,67,400 ஆண்டு பராமரிப்புச் செலவிற்கும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

வீரப்பன்சத்திரம் பெரிய அக்கிரகாரம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் மார்ச் 1975-ல் துவக்கப்பட்டு, பெரும்பாலான பணிகள் யாவும் முடிவுற்று, பொதுமக்களுக்கு 28—4—1980 முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

காசிபாளையம் பேரூராட்சி, சூரம்பட்டி ஊராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் 1978-ம் ஆண்டு துவங்கப்பட்டன.

இத்திட்டப் பணிகள் யாவும் 1981-ம் ஆண்டு மார்ச்சு மாதம் பூரணமாக முடிந்து பொதுமக்களுக்குப் பயனளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பல விவரங்களைத் திரட்டியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தகுந்த விஷயம். ஆனால், எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் மறுபடியும் சொல்கிறேன். காவேரி யாற்றங்கரையில் இருக்கிற இடம் அது. அந்த இடத்திற்கு தண்ணீர் கொடுக்க இவ்வளவு நெருக்கடி ஏன் வந்தது? எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்குப் பதிலாக இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்ளே அந்த நீர்த் திட்டத்தை நிறைவேற்றி குடிக்க தண்ணீர் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்குப் பதிலாக விரைவில் முடிப்பதற்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்லுகிறேன்.

திரு. கோவைத்தம்பி: தலைவரவர்களே, காவேரியாற்றிலிருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டு வர, ஈரோடு மாவட்டத்திற்கு—குறிப்பாக ஈரோடு நகரத்திற்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அது எவ்வளவு நாட்களில் நிறைவேறும் என்பதை அறிவிப்பார்களா?

[1980 ஜூலை 28

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஈரோடுக்கு குடிக்கத் தண்ணீர் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, காவேரியாற்றை ஒட்டியிருக்கும், மிக அருகில் உள்ள ஊர்களுக்கு இரண்டாண்டுகளுக்கும் மேலாக திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இரண்டு மூன்று ஆண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களே நிறைவேற்றப்படாமல் இருந்தால், புதிதாகக் கிணறுகள் வெட்டி தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கும் கிராமங்களுக்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? ஆகவே, இவைகளை உடனடியாக கால வரம்புக்கு உட்பட்டு செய்து கொடுக்க அரசாங்கம் வேலைகளை ஆரம்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, கேள்வி பெரியார் மாவட்டத்திலுள்ள ஊரைப் பற்றியது. பேரூராட்சியில் அல்லது நகராட்சியில் தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானத்தை அனுப்பி, இன்வெஸ்டிகேசன் சார்ஜஸ்—ஆய்வுப் பணம் கொடுத்து, அந்தப் பணம் கிடைத்த பிறகு ஆய்வு செய்து, அது முடிந்த பிறகு இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் ஆகும், இதைப் பராமரிக்க எவ்வளவு ரூபாய் ஆகும் என்பதைப் பார்த்து, அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் சொல்லி, பிறகு பணத்தை வாங்கி, அதற்குப்பிறகு வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கால தாமதம் ஆகிறது என்று கருதினால், கூடுமான வரையில் இந்தப் பணிகளை விரைவில் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு நான் ஆணையிடுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கேள்வி பெரியார் மாவட்டத்தைப் பற்றியது என்று சொல்லிவிடக் கூடாது. பொதுவாக இங்கே இருக்கின்ற பிரச்னைகளை எடுத்துக்கொண்டால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அப்படிச் சொல்லக் கூடாது என்று ஆரம்பிக்காதீர்கள், கேள்வி பெரியார் மாவட்டத்தைப் பற்றியது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: இதுபோன்ற குடிநீர்த் திட்டங்கள் பல ஆண்டுகாலமாக முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. சில சமயங்களிலே பாதித் திட்டங்கள்

1980 ஜூலை 28]

நிறைவேற்றப்பட்டு பாதி அப்படியே விட்டுவிடப்படுகிறது, இப்படி 2, 3 கேள்விகள் வந்தபோது நான் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்படாத திட்டங்கள் என்ன என்ன என்று கேட்டு அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வியாகப் போட்டால் அதற்குத் தகுந்த பதில் கொடுக்கப்படும்.

குளித்தலை அரசினர் மருத்துவ மனை.

*வினா எண் 63—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை அரசினர் மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) குளித்தலை அரசு மருத்துவ மனையில் பிரசவ விடுதி கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. டி. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி பிரசவ விடுதி கட்டவேண்டுமென்று மாவட்ட அதிகாரிகளால் அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 1975 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று அரசு ஆணை எண் 812 இன் அடிப்படையிலே 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இது விரிவுபடுத்தப்பட்டது. இது இப்போது 3 லட்சம் பேர்களுக்குப் பயன்படுவதாக உள்ளது. அதற்காக மீண்டும் 100 எம்.ஏ. எக்ஸ்ரே யூனிட்டும்